Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/21**

Paper 2 Reading and Writing **October/November 2018**

**1 hour 45 minutes**

INSERT

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய கட்டுரைகள் இந்த இணைப்பில் உள்ளன.

இந்த இணைப்பில் உன் எண்ணங்களை எப்படி எழுத வேண்டும் என்று குறித்துக் கொள்ளலாம். இந்த இணைப்பைத் தேர்வு அதிகாரி **மதிப்பிட மாட்டார்**.




DC (LK) 152792/3
© UCLES 2018


CAMBRIDGE
International Examinations

**[Turn over**


https://xtremepape.rs/

பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

**விடலைப் பருவம்**

பொதுவாக பதிமூன்று முதல் பதினெட்டு வயது பிள்ளைகள் விடலைப் பருவம் என்று பிரிக்கப்படுகிறார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் விடலைப் பருவத்து பிள்ளைகளைப் பற்றி, என்ன செய்வதென்று பேசவும், விவாதிக்கவும் முடியாமல் தவிக்கிறார்கள். கோபம், சவாலான மனப்பான்மை, வேகமாக மாறும் எண்ணங்கள், ஆபாசமான மொழிப் பிரயோகம், போதை என பல குறைகள் அவர்களிடம் நீண்டு கொண்டே போகும்.

பழங்காலத்தைப் பார்க்கும் போது, இப்போது உள்ள விடலைப் பருவப் பிள்ளைகளுக்கு நிறைய சுதந்திரம் இருக்கிறது. அவர்கள் வெளி உலகத்துடன் அதிக தொடர்பு வைத்துக்கொள்கிறார்கள். குடும்பத்துடன் குறைவான நேரம் தான் செலவு செய்கிறார்கள். கெட்ட நண்பர்களின் தொடர்பு உறவுகளை மிகவும் பாதிக்கிறது. ஒரு சந்தோஷமான குடும்பத்து பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் குறைவாக காணப்படும். பல மாறுபட்ட எண்ணங்களுக்கு இடையில் குடுப்பத்திலும் வெளி உலகிலும் தங்கள் தனித்துவத்தை நிலைநிறுத்த முற்படும் போது, விடலைப் பருவத்தினருடன் பெற்றோர்களுக்கு கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பானதே.

எல்லை மீறிய விடலைப்பருவத்தினரிடம் நீண்ட அறிவுரைகள் உரைப்பது பயனற்றது. அடிக்கடி அவர்களின் தவறுகளை சுட்டிகாட்டுவதும் அதிகம் உதவாது. ஒவ்வொரு கருத்துபரிமாற்றமும் ஒரு கேள்வி நேரமாக மாறும் போது உறவுகளின் தாக்கம் பயனற்றதாகி விடுகிறது.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ராமனின் குடும்பத்தில் எப்போதும் சுமுக உறவு நிலவுகிறது. எப்படி உன் குடும்பத்தில் எப்போதும் உனக்கும் பெற்றோர்களுக்கிடையே நல்லுறவு நீடிக்கிறது என்று கேட்ட போது ராமன், “எங்கள் வீட்டில் கருத்துப் பரிமாற்றம் நடக்கும் போது பேச்சு நடையுடன் கூடிய கலந்துரையாடல் இருக்கும். பெற்றோர்கள் அவர்களுடைய எண்ணங்களை என் மீது திணிக்க மாட்டார்கள். எந்த ஒளிவு மறைவும் இல்லாமல் எனக்கு பேச்சு சுதந்திரம் தருகிறார்கள். நான் முடிவை எடுக்க என்னை அனுமதிப்பதால் இருதரப்பினருடைய நம்பிக்கை வளர்கிறது” என்று சொன்னான்.

ஒரு சில நேரத்தில் பொறுமை அவசியம். ஆனால் பெற்றோர்கள் இல்லத்தின் விதிகளை கண்டிப்பாக வலியுறுத்த வேண்டும். எல்லா கட்டுப்பாடுகளும் விடலைப் பருவத்தினரை பாதுகாக்கத் தான் என்பது அவர்கள் மனதில் பதிய வைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, வீட்டில் உள்ள விடலைப்பருவத்தினரிடம் வண்டியில் செல்லும் போது ஹெல்மெட் அணிய வேண்டும் என்று பல விபத்துக்கள் ஏற்படும் முன்னரே வலியுறுத்துவது நன்மை தரும். அந்த தருணத்தில் இந்த விதி கசப்பாக தோன்றினாலும், விடலைப்பருவத்தினரிடம் பெற்றோர்களின் பாசத்தை வலியுறுத்தும் செயல் இதுவாகும். குடும்பத்தின் பெயர் கெட்டுவிடக் கூடாது என்பதிலும் பெற்றோர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

பெற்றோர் - மாணவர் நல சங்கத் தலைவர் திரு சோமசுந்தரத்திடம், இது பற்றிக் கருத்து கேட்ட போது, “மோதல்களை எதிர்நோக்காமல் புறக்கணிப்பது நல்லதல்ல. மவுனம் மற்றும் வெளிப்படாத கோபம் பல இன்னல்களை தரும். நீண்ட காலத்திற்குப் பிறகு அவை வெடிக்கும் வாய்ப்பு உள்ளது. பெற்றோர்களின் பங்கு எல்லாவற்றிலும் இயல்பான நிலையை உருவாக்கி, சந்தேகத்துடன் பார்க்காமல், நம்பிக்கையுடன் பார்ப்பது அவசியம். இது சுலபமான செயல் அல்ல. இந்த விடலைப்பருவத்தை இன்பமாக செலவிட இருதரப்பினரும் முயற்சி செய்வது இன்றியமையாதது” என்று கூறினார்.



https://xtremepape.rs/

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்து விட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

### குடும்பத்தை காப்பாற்றவும்

குடும்பம் இந்த சமுதாயத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. இதன் துவக்கம் பல்லாயிர வருடங்களுக்கு முன்னால் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. முதுகுத்தண்டு போல சமூகத்தில் நிமிர்ந்து நின்ற குடும்பம் எனும் அமைப்பு, இன்று பல காரணங்களினால் மிகவும் பலமிழந்து நிற்கின்றது. சுலபமாக விவாகரத்து செய்யும் வாய்ப்புக்கள் எல்லோருக்கும் கிடைக்கின்றன.புள்ளிவிவரங்களை பார்க்கும் போது ஆண்டுதோறும் விவாகரத்து அதிகரிப்பது தெரிகிறது. வாழ்க்கைத்தரம் பற்றிய அதிகமான எதிர்பார்ப்புகள், போட்டி மற்றும் பேராசை காரணமாக அதிகரிக்கின்றன. அதிகமான தாய்மார்கள் மகப்பேற்றுக்கு பின் தங்கள் தொழிலில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தினால், குழந்தைகள் நல்ல வளர்ச்சி பெறுவதற்கு முன்னரே வேலைக்கு திரும்புகிறார்கள். சுதந்திரமான போக்கு போன்ற காரணங்கள் குடும்பத்தின் நிலையை பாதிக்கின்றன. பல காலங்களாக இருந்து வரும் அற நெறிகள் மறைந்து வருகின்றன.

இந்த மாற்றங்கள் எப்போதும் நல்லதல்ல. இன்றைய வேகமான வாழ்க்கை சூழல் ச்மூகத்தில் மிக முக்கியமாக கருதக்கூடிய நல்ல பழக்கவழக்கங்களை இழக்கச் செய்கிறது. குடும்பமே அதில் அதிகம் பாதிக்கப்படுகிறது. வேலைப்பளு காரணமாக ஒரு நாளில் இருபத்திநான்கு மணி நேரம் குறைவாக தென்படுகிறது. அதன் காரணமாக குடும்பத்தினருடன் நேரம் கழிப்பது குறைவாகிறது. ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொள்ளாததும், விட்டுக்கொடுக்காத போக்கும் உறவுகளை சர்ச்சைக்கு உள்ளாக்குகிறது. குடும்பம் என்னும் ஆணிவேர் பழுதாகி விடும் கட்டத்திற்கு வந்து விடுகிறது.

இன்றைய காலகட்டத்தில் வாழ்க்கை மிகவும் கடினமாக மற்றும் சமூகத்தின் தீய சக்திகளின் தாக்கத்தில் அமைந்துள்ளது. வேலையின்மை, மது, போதை என்ற பல தீய சக்திகள் குடும்பத்தை பிரிக்க வழிவகுக்கிறது. நம் எதிர்பார்ப்பிற்கு ஏற்றார் போல் எல்லாம் அமையவில்லை என்றால் அந்த ஏமாற்றத்தை வெளிக்கொண்டு வருவதற்கு, தங்களின் மிகப் பிரியமான குடும்பத்து உறவுகளிடம் கோபத்தை காட்டுகின்றனர். அதனால் குடும்பம் என்ற ஒரு பாதுகாப்பு வளையம், அத்துமீறல் மற்றும் வன்முறையின் உறைவிடமாக அமைந்து விடுகிறது.

ஒரு நாள் முடிவடையும் போது, சமையல் மற்றும் வீட்டு வேலை காரணமாக பெற்றோர்கள் சக்தியற்று நிற்கிறார்கள். மாலையில் பிள்ளைகள் விளையாட்டு, தொலைக்காட்சி மற்றும் கணினியில் நேரம் செலவிடுவதால் களைத்து போகிறார்கள். இருவரும் பேசுவதற்கான நேரம் அரிதாகிறது. அதனால் மிகவும் அத்தியாவசியமான கருத்துப் பரிமாற்றம் மற்றும் உரையாடல்களுக்கு குடும்பத்தில் நேரம் இருப்பதில்லை.

அண்ணன் தம்பி, அப்பா அம்மா மற்றும் குடும்ப உறவினர்களுடன் குடும்பத்தில் வாக்குவாதங்கள் வருவது மிகவும் இயல்பான நிகழ்வு. ஒருவகையில் இது அவசியமும் கூட. ஆனால் பெரியவர்கள் அதை தீர்க்க முற்படாமல், தீயில் எண்ணை வார்ப்பது போல் குழந்தைகளின் சண்டைகளை பெரிதாக்குவது பரவலாகி வருகிறது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகளை தீர்ப்பதே சாலச் சிறந்ததாகும். தங்களின் எண்ணங்களை பிடிவாதமாக நிலைநிறுத்த முயற்சி செய்யாமல் அனுசரணையாக செயல்பட வேண்டும்.

© UCLES 2018

https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



https://xtremepape.rs/